மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைக் கொடுப்பார்களேயானால், அது பரிசீலிக்கப் படும்.

இராஜபாளையம் நாய்களின் இனப் பெருக்கத் திட்டம்.

*வினா எண் 886.—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : நாய் வளர்க்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே இராஜபாளையம் நாய்களின் இனத்தைப் பெருக்க சைதாப் பேட்டையிலே ஒரு கால்நடை மருத்துவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, உலகத்திலேயே வீரத்திற்கும், விவேகத்திற்கும் பெயர் பெற்றது இராஜபாளையம் நாய்கள், அந்த இராஜபாளையம் நாய்கள் பிறந்த மண்ணிலேயே இனப்பெருக்கம் செய்ய அரசு நாய்ப் பண்ணையை ஏற்படுத்துமா ? இன்றைக்கு வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கவேண்டும் என்று விளம்பரப்படுத்துவதைப்போல, பாதுகாப்பாக இருக்க வீட்டுக்கு ஒரு நாய்—அதுவும் இராஜபாளையம் நாய்—வளர்க்க வேண்டும் என்று அரசு விளம்பரம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் கூறும்போது நாய் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் நாய்களை வளர்க்க சைதாப்பேட்டையில் கால்நடைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு இனப்பெருக்கம் செய்து கொண்டு வருகிறது என்று கூறினேன். இதற்காக நாய்கள் வாங்க 5 ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டு, 10 இராஜபாளையம் நாய்கள் 2,135 ரூபாயில் வாங்கப் பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய பெரிய பணக்காரர்கள், நடிகர், நடிகைகள் எல்லாம் அல்சேஷன் நாய்களைத்தான் வளர்க்கிறார்கள். ஆனால் பாதுகாப்புக்குச் சிறந்த நாய்கள் இராஜபாளையம் நாய்கள்தான் என்று அரசு பெரிய அளவில் விளம்பரம் செய்யுமா? அந்த இராஜபாளையம் நாய்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுமா ? அப்படி ஏற்றுமதி செய்யப்படும் நாய்களைப் பராமரிக்க ஊர்மட்டக் குழு ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி 'நாய் வளர்க்கும் திட்டத்தின்கீழ் இராஜபாளையம் இனப்பெருக்கத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா' என்பது. அதற்கு சைதாப்பேட்டையில் ஆரம்பித்திருப்பதாகச் சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அல்சேஷன் நாய்களுக்குப் பதிலாக, வசதி படைத்தவர்கள், இராஜபாளையம் நாய்கள் வளர்த்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. பாபு ஜனார்த்தனன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்கள்.

* வினா எண் 887.—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு சமூக நலத்துறை கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) தொழுநோய் பிச்சைக் காரர்களுக்கான இல்லங்களை மேலும் கட்டும் உத்தேசமில்லை.

(ஆ) மறுவாழ்வு இல்லங்களில் உள்ளவருக்கு துணி நெய்தல், பாய் பின்னுதல், செருப்பு செய்தல், தையல் தொழில், தச்சு வேலை, பட்டுப்புழு வளர்ப்பு, விவசாயம் கயிறு திரித்தல் முதலிய வாழ்க்கைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வெளியில் அனுப்பப்படுகிறார்கள். அவ்வாறு பயிற்சி பெற்று வெளியில் செல்பவர்கள் பிச்சை எடுக்காமல் தொழில் செய்து பிழைக்க உதவுவதே மறுவாழ்வு இல்லங்களின் நோக்கமாகும்.

திரு. சாஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் இருக்கும் தொழுநோய் பிச்சைக் காரர்கள் மறுவாழ்வு இல்லத்தில் எவ்வளவு பேர் தற்போது இருக்கிறார்கள் ?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.